
# ஒட்டகச்சிவிங்கி



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# ஒட்டகச்சிவிங்கி

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

புள்ளிகளைக் கொண்டிருப்பேன்

மானும் அல்ல..

உயரமாக இருப்பேன்

ஒட்டகமும் அல்ல ..

பெரிதாக இருப்பேன்

யானையும் அல்ல..

நின்று கொண்டே தூங்குவேன்

குதிரையும் அல்ல..

நான் யார் தெரியுமா?

தெரிந்து கொள்ள வாருங்கள்.....

# ஒட்டகச்சிவிங்கி

உலகில் பல்வேறு உயிரினங்கள் வாழ்கின்றன. நிலத்தில் வாழும் உயிரினங்களில் மிகவும் உயரமான பாலூட்டி விலங்கு ஒட்டகச்சிவிங்கி ஆகும். இது தாவர உண்ணி வகையைச் சார்ந்தது. இது ஜிராப்பிடே (giraffidae) என்னும் குடும்பத்தையும் , ஜிராப்பா (giraffa) என்னும் பேரினத்தையும் சேர்ந்தது. பாலூட்டி விலங்குகளில் ஒட்டகச்சிவிங்கி, குதிரை, நீர்யானை, கழுதை, பன்றி, ஆடு, மாடு, மான், ஒட்டகம் போன்றவை இரட்டைப்படை விரல்கள் என்று பொருள்படும் ஆர்ட்டியோடாக்டிலா (Artiodactyla) என்ற உயிரியல் வரிசையில் அமைந்துள்ளன. இரட்டைப்படைக் குளம்பிகளின் (Even–toed ungulate) ஒரு சிறப்பு அமைப்பு யாதெனில், அவை நடக்கும் இடத்திற்கு ஏற்ப பாதம் இசைந்து கொடுக்கும் தன்மையைப் பெறுவதாகும். ஒட்டகச்சிவிங்கியும் இந்த வகையைச் சேர்ந்தது தான்.

இரட்டைப்படைக் குளம்பி





செரெங்கேட்டி தேசியப் பூங்கா

ஒட்டகச்சிவிங்கிகள் ஆப்பிரிக்கக் காடுகளிலும் குறிப்பாக ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதிகளில் உள்ள புல்வெளிகளிலும் அதிகம் காணப்படுகின்றன. ஆப்பிரிக்காவின் கிழக்கே தான்சானியாவில் உள்ள பழமையான செரெங்கேட்டி தேசியப் பூங்கா (the

Serengeti National Park), கென்யாவின் தலைநகரான நைரோபியின் தென்கிழக்கில் அமைந்துள்ள அம்போசெலி தேசியப் பூங்கா (the Amboseli National Park) மற்றும் சகாராப் பாலைவனத்தின் தெற்குப்பகுதியிலுள்ள சூடான் நாட்டிலும் இவை அதிக எண்ணிக்கையில் வசிக்கின்றன. மரங்கள் அரிதாகவே வளரும் வெப்ப மண்டலப்பகுதிகளில் குடியேறவே இவை விரும்புகின்றன. இவற்றின் உணவு மற்றும் தண்ணீர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு இங்கு மரங்கள் மற்றும் நீர்நிலைகள் உள்ளன. அதே போல், அவை வசிக்கும் புல்வெளிகளில் உள்ள ஆறுகள் மற்றும் ஏரிகளிலிருந்து சற்றுத் தொலைவிலேயே காணப்படுகின்றன. ஏனெனில் ஒட்டகச்சிவிங்கிகள் வாழக் குறைந்த அளவு தண்ணீரே தேவைப்படுகிறது.


அம்போசெலி தேசியப் பூங்கா





காட்டில் வசிக்கும் விலங்குகளில் மிகப்பெரிய உடல் அமைப்பு கொண்டது ஆப்பிரிக்க யானை. இருப்பினும் யானையைவிட 1.5 மீட்டர் அதிக உயரம் கொண்டது ஒட்டகச்சிவிங்கி. ஆண் ஒட்டகச்சிவிங்கிகள், பெண் ஒட்டகச்சிவிங்கிகளை விட அதிகமான உயரமும் எடையும் கொண்டவை. ஆண் ஒட்டகச்சிவிங்கிகள் கால்களிலிருந்து கொம்புகள் வரை 19 அடி உயரமும் 1900 கிலோகிராம் (4,300 பவுண்டுகள்) எடையுள்ளவை. பெண் ஒட்டகச்சிவிங்கிகள் 16 அடி உயரமும் 1200 கிலோகிராம் (2,600 பவுண்டுகள்) எடையும் கொண்டவை.


ஒட்டகச்சிவிங்கிகளின் கழுத்து மிக நீளமானது. நீண்ட கழுத்துக்கென்றே

பெயர் பெற்ற இவற்றின் இதயத்திலிருந்து 10 அடி உயரத்தில் இருக்கும் மூளைக்கு இரத்தம் மேல் நோக்கிச் செல்ல வாய்ப்பில்லை. எனவே, இதயத்திலிருந்து மூளைக்கு இரத்தத்தைக் கொண்டு செல்வதற்கு இதன் கழுத்தில் உள்ள இரத்த நாளங்களில் வால்வுகள் போன்ற அமைப்புகள் உள்ளன. இவை இரத்தத்தின் அழுத்தத்தைச் சீராக்குவதற்கும், அவை பின்னோக்கி வராமல் இருப்பதற்கும் உதவுகின்றன. இந்த அமைப்பு வேறு எந்த உயிரினத்திலும் இல்லை. "ஆள் பாதி ஆடை பாதி" என்று கூறுவதைப் போல ஒட்டகச்சிவிங்கிகளை **ஆள் பாதி கழுத்து பாதி** என்றே கூறலாம்.






ஒட்டகச்சிவிங்கியின் கழுத்து மட்டும் **10 அடி** வரை இருக்கும். எனினும், கழுத்தில் இருக்கும் செர்விக்கல் (Cervical bone) எலும்புகள் மனிதனுக்கு உள்ளது போல் **ஏழு** தான் உள்ளன. இந்த எலும்புகள் ஒவ்வொன்றும் அகலமாகவும், 25 செ.மீ. வரை நீளமாகவும் இருக்கும்.



ஒட்டகச்சிவிங்கியின் இரத்த அழுத்த மாற்றம் மற்ற விலங்குகளைக் காட்டிலும் வினோதமானது. ஒரு மனிதனுடைய சராசரி இரத்த அழுத்தம் 120/70 என்று எல்லோருக்கும் தெரியும். ஒட்டகச்சிவிங்கியின் இரத்த அழுத்தம் 300/200 ஆகும் . உலகிலுள்ள எல்லா விலங்குகளையும் விட அதிக இரத்த அழுத்தம் கொண்ட விலங்கு ஒட்டகச்சிவிங்கி. ஒரு மனிதனின் இதயம் இயங்குவது போல, ஒட்டகச்சிவிங்கியின் இதயம் இயங்கினால், போதுமான இரத்த அழுத்தமின்றி, மூளைக்குத் தேவையான இரத்த அழுத்தமும், பிராண வாயுவும் கிடைக்காது. ஆகையால், அதிகமான இரத்த அழுத்தம் தரக்கூடிய தன்மையுள்ள இதயம் தேவை.

| மனித இதயம் | ஒட்டகசிவிங்கி இதயம் |
|---|---|
|  |  |


அவ்வளவு அதிக திறன் கொண்ட இதயத்தைப் பெற்றுள்ளது ஒட்டகச்சிவிங்கி. இவற்றின் இதயம் **10 கிலோ** எடையுடையது. இது மனித இதயத்தை விடப் பெரிதானது. ஒட்டகச்சிவிங்கிகளின் இதயம் மணிக்கு **நூற்றைம்பது (150)** முறை துடிக்கும். ஆப்பிரிக்கத் தூசிப் புயல்களின் போது மணல் மற்றும் தூசியை வெளியேற்ற நாசியை முழுவதுமாக மூடும் திறன் ஒட்டகச்சிவிங்கிகளுக்கு உள்ளது.

ஒட்டகச்சிவிங்கிகளின் அடிவயிற்றைத் தவிர ஏனைய உடல் முழுவதும் புள்ளிகள் காணப்படுகின்றன. புள்ளிகளின் அமைப்பு ஒட்டகச்சிவிங்கிகள்

ஒவ்வொன்றுக்கும் தனித்துவமானவை. வேட்டையாட வரும் விலங்குகளிடமிருந்து மறைவாகத் தப்பித்துக் கொள்ள இந்த உடல் புள்ளிகள் உதவுகின்றன. மரங்களிடையே மறைவில் இருக்கும்போது இதன் உடலை எளிதில் கண்டுபிடிக்க முடியாது. இவற்றின் தோலும் புள்ளிகளும் மரத்தின் நிழலோடு ஒன்றாகிவிடும். இவை நீண்ட நீல நிற நாக்கினைக் கொண்டுள்ளன. ஒட்டகச்சிவிங்கியின் நாக்கின் நீளம் **சுமார் 40–45 செ.மீ** ஆகும். ஒட்டகச்சிவிங்கியின் முன்னங்கால்களும் பின்னங்கால்களும் சமமானவை. ஆனால் நமக்கு ஒன்றை விட ஒன்று சிறியதாக இருப்பது போல் தோன்றும். இவற்றின் வால் 1 மீட்டர் நீளமுடையது. இரு பாலின ஒட்டகச்சிவிங்கிகளுக்கும் ஒரு ஜோடி கொம்புகள் உள்ளன. ஆனால், பெண் ஒட்டகச்சிவிங்கிகளின் கொம்புகள் சிறியது. இவற்றின் கொம்புகள் ரோமத்தால் போர்த்தப்பட்டிருக்கும்.




*ஒட்டகச்சிவிங்கியின் நாக்கு*




*வால்*

ஒட்டகச்சிவிங்கிகள் நடக்கும் போது அவற்றின் இரு கால்களையும் அதன் உடலின் ஒரு பக்கத்தில் நகர்த்தி, பின்னர் இரு கால்களையும் மறுபுறம் நகர்த்துகின்றன. இது அசாதாரணமானது. இருப்பினும், ஒட்டகச்சிவிங்கிகள் மற்றப்

பாலூட்டிகளுக்கு ஒத்த பாணியில் இயங்குகின்றன.

ஒட்டகச்சிவிங்கி கூர்மையான பார்வைத் திறனையும் வண்ணங்களை அறிந்து கொள்ளும் திறனையும் கொண்டது. இதனால் கொல்லுயிர் விலங்குகளைத் தொலைவில் இருந்தே அறிந்து கொள்கிறது. மேலும் நீண்ட தூரம் பார்ப்பதற்கு இதன் உயரமும் ஏற்றதாக உள்ளது. ஒட்டகச்சிவிங்கியால் **ஒரு கிலோமீட்டர்** தொலைவில் உள்ள விலங்குகளையும் பார்க்க முடியும். வெகு தொலைவில் எதிரிகளைக் கண்டவுடன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஓடுவதனால், பிற விலங்குகளும் ஒட்டகச்சிவிங்கியை வழிகாட்டியாக கொண்டு அதனோடு ஓடுகின்றன. அதனால் ஒட்டகச்சிவிங்கி தன்னை மட்டுமல்லாது பிற விலங்குகளையும் ஆபத்திலிருந்து காப்பாற்றுகிறது.



*பார்வை திறன்*

ஒட்டகச்சிவிங்கிகளின் வளர்ச்சியால் அவை மற்ற விலங்குகளால் அணுக முடியாத இலைகளைக் கூட அடைய முடிகிறது. ஒட்டகச்சிவிங்கிகள் விழித்திருக்கும் நேரங்களில் பெரும்பாலும் இலை, தழைகளைத் தின்று கொண்டே இருக்கும். ஒட்டகச்சிவிங்கிகள் பெரும்பாலும் அகாசியா(acacia) மரங்களை நாடி, அதன் இலைகளையே விரும்பி உண்கின்றன. சில அகாசியா மரத்தின் விதைகள் இவை உணவு உட்கொண்ட பின் வெளியேறும் சாணத்திலிருந்து மட்டுமே முளைக்கின்றன. இவ்வாறு தான் வாழும் சுற்றுச்சூழலை தகவமைத்துக் கொள்வதிலும் இவை பெரும்பங்காற்றுகின்றன. மாடுகளைப் போல ஒட்டகச்சிவிங்கியும்



அகாசியா(acacia)


அசைபோடும் பிராணி ஆகும். அதாவது இவை உணவுகளை அவசர அவசரமாகச் சாப்பிடும். பின்னர் ஒய்வெடுக்கும் போது பாதி ஜீரணமான உணவு மீண்டும் வாய்க்கு வரும். அதை மீண்டும் நன்றாக அரைத்துச் சாப்பிடும்.

அசை போடுதல்



ஒட்டகச்சிவிங்கிகள் ஒரு நாளில் பதினாறு முதல் இருபது மணி நேரத்தை

உண்பதற்காகவே செலவிடுகின்றன. ஒட்டகச்சிவிங்கிகள் ஆற்றல் குறைந்த நார்ச்சத்து உள்ள பொருட்களையே தேர்ந்தெடுத்து உட்கொள்கின்றன. ஆண் ஒட்டகச்சிவிங்கிகள் ஒரு நாளைக்கு **65 கிலோ** வரை உணவை உட்கொள்கின்றன. ஒட்டகச்சிவிங்கிகள் தங்கள் உணவில் இருந்து அதிக தண்ணீரைப் பெறுகின்றன. இவை வறண்ட காலங்களில் மூன்று நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் குடிக்கின்றன.



ஒட்டகச்சிவிங்கிகளின் கால்கள் நீளமாக இருப்பதாலும், கழுத்து நீளமாக இருப்பதாலும், பிற விலங்குகளைப்போல், அவற்றால் சுலபமாக தண்ணீர் குடிக்க இயலாது. எனவே, அவை குனிந்து தண்ணீர் குடிக்க ஏதுவாக, முன்னங்கால்கள் இரண்டையும் அகற்றி வைத்து, தலையை இதயத்தின் மட்டத்தில் இருந்து ஏழு அடி கீழ் நோக்கிக் கொண்டு வந்து, குனிந்து,



சிரமத்துடன் தான் தண்ணீர் குடிக்க முடியும். ஒட்டகச்சிவிங்கிகள் தண்ணீர் அருந்திய பின், இரண்டு வினாடிகளில் தரைப்பகுதியில் இருந்து தலையை பதினெட்டு அடி உயரத்திற்குத் தூக்கி விடும் திறன் கொண்டவை. இவ்வாறு தண்ணீர் குடிக்கும் வேளையில்

அவை ஆபத்துக்கு ஆளாகின்றன. முதலை, சிங்கம் போன்ற விலங்குகள் தாக்க வரும் போது அவற்றிடமிருந்து தங்களைப் பாதுகாப்பதில் சில சமயங்களில் தோல்வியடைகின்றன.


ஒட்டகச்சிவிங்கிகள் நான்கு அல்லது ஐந்து வயதில் இனப்பெருக்கம் செய்கின்றன. ஒட்டகச்சிவிங்கிகள் 14 முதல் 15 மாத கர்ப்பக் காலத்தின் பின் ஒரு குட்டியை ஈனுகின்றன. இவை நின்ற படியே குட்டி ஈனுபவை என்பது குறிப்பிடத்தக்கது. சில விலங்குகள் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட



குட்டிகளைப் பிரசவிப்பது உண்டு. ஆனால், ஒட்டகச்சிவிங்கி ஒரு நேரத்தில் ஒரு குட்டி மட்டுமே பிரசவிக்கும். பிறந்ததும் ஒட்டகச்சிவிங்கி குட்டி **1.8 மீட்டர்** உயரம்

இருக்கும். குட்டியானது பிறந்த ஒரு மணி நேரத்தில் எழுந்து நிற்கும். அத்துடன் தனது தாயின் மடியில் பால் குடிக்கும். அதன் பிறகு அவற்றால் நடக்கவும் ஓடவும் முடியும். 6 மாதம் வரை குட்டி தனது தாயிடம் பால் குடிக்கும். பிறந்த இரண்டு வாரங்களில் இலைகளைக் குறைவாகத் தின்னும். பிறந்த ஓராண்டுக்குள் ஒட்டகச்சிவிங்கி தனது தாயைப் பிரிந்து தன் வயதுள்ள பிற ஒட்டகச்சிவிங்கிகளுடன் இணைந்து வாழும். இருப்பினும் அதை இரண்டு வயதான ஒட்டகச்சிவிங்கிகள் கண்காணிக்கும். கூட்டத்தை விட்டுப் பிரிந்தால் வயதான ஒட்டகச்சிவிங்கிகள் அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து கூட்டத்தில் இணைத்துக் கொள்ளும். இந்தக் காலகட்டத்தில் அடிக்கடி தன் தாயைப் பார்த்து விட்டுச் செல்லும். ஒரு வயது தாண்டிய பிறகு படிப்படியாக தன் தாயை மறந்து விடும். நன்றாக வளர்ந்த ஒட்டகச்சிவிங்கிகள் மணிக்கு **56 கிலோமீட்டர்** வேகத்தில் ஓடும். ஒட்டகச்சிவிங்கிகள் நான்கு வயதிற்குள் அவற்றின் முழு உயரத்திற்கு வளர்கின்றன.

*தாய் மற்றும் குட்டி*



ஒட்டகச்சிவிங்கியின் பாலினத்தை அதன் தலையில் உள்ள கொம்புகள் மூலம் அடையாளம் காண முடியும். ஆண் ஒட்டகச்சிவிங்கிகளுக்கும் பெண் ஒட்டகச்சிவிங்கிகளுக்கும் கொம்புகள் உள்ளன. ஆனால், பெண் ஒட்டகச்சிவிங்கிகளின் கொம்புகள் சிறியவையாகவும், மேலே முடியால் மூடப்பட்டும் இருக்கும். ஒட்டகச்சிவிங்கிகள் அமைதியாகக் காணப்படும் ஒரு இனம். மேலும்

இவை அரிதாகவே ஒலி எழுப்புகின்றன. இருப்பினும், இனச்சேர்க்கை மற்றும் வளர்ப்புப் பருவத்தில் இவை பொதுவாகக் குரல் கொடுக்கும். ஆண் இனத்தைச் சேர்ந்த ஒட்டகச்சிவிங்கிகள் உரத்த இருமலை வெளியிடுகின்றன. பெண் இனத்தைச் சேர்ந்த ஒட்டகச்சிவிங்கிகள் தனது குட்டியை அழைப்பதற்காகவே குரல் எழுப்புகின்றன.

ஆண் பெண்



இவ்வளவு பெரிய விலங்குகள் எப்படி தூங்குகின்றன என்பதைக் கற்பனை செய்வதே கடினம். உண்மையில் ஒட்டகச்சிவிங்கிகள் தூங்கும்போது சில சிரமங்களுக்கு ஆளாகின்றன. இவை தூங்கும் நேரம் மிகவும் குறைவே. மேலும், ஒட்டகச்சிவிங்கிகளுக்குச் சுமார் ஒரு மணி நேரம் தூங்கினாலே போதும்.



ஒட்டகச்சிவிங்கிகள் சில நேரங்களில் தூங்கும்போது தலையைப் பின்னங்கால்களில் வைத்து ஒரு வளைவை உண்டாக்குகின்றன. தூக்கத்தின் போது இவற்றின் கண்கள் பாதி மூடிய நிலையில் இருக்கும். பெரும்பாலும் இவை நின்றுகொண்டே தூங்குகின்றன.

ஒட்டகச்சிவிங்கியின் வயதை அதன் திட்டுக்களை வைத்துக் கணக்கிட முடியும். ஒட்டகச்சிவிங்கியின் திட்டுக்கள் அடர்த்தியாக இருந்தால், அது வயதான ஒட்டகச்சிவிங்கி என்று அறியப்படுகிறது. ஒட்டகச்சிவிங்கியின் பலமே அதன் பின்னங்கால்கள் தான். அதாவது அது தன் பின்னங்கால்களால் உதைக்கும் உதை



தான் அதன் பலமாகும். ஒட்டகச்சிவிங்கிகளின் முக்கிய எதிரி சிங்கமும், புலியும் தான். எதிரிகளிடமிருந்து தப்ப அவற்றைத் தன் கால்களால் உதைத்துத் தள்ளும். ஒட்டகச்சிவிங்கியிடம் உதை வாங்கி உயிரை விட்ட சிங்கங்களும் உண்டு. அந்த அளவிற்கு அவற்றின் உதை பலமானதாக இருக்கும். இதுபோல, சில நேரங்களில் சிறுத்தைகள், கழுதைப்புலிகள், செந்நாய்கள், முதலைகள் போன்றவை இளம்

ஒட்டகச்சிவிங்கிகளை வேட்டையாடும். ஒட்டகச்சிவிங்கிகள் பிற விலங்குகளால் வேட்டையாடப்படாமல் இருந்தால் அவை 26 ஆண்டுகள் வரை காடுகளில் வாழும்.

ஒட்டகச்சிவிங்கியின் இனங்கள் மற்றும் கிளையினங்கள் ஒன்பது உள்ளன என ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர். அவை மசாய் ஒட்டகச்சிவிங்கி, வடக்கு ஒட்டகச்சிவிங்கி, கோர்டோபன் ஒட்டகச்சிவிங்கி, நுபியன் ஒட்டகச்சிவிங்கி, மேற்கு ஆப்பிரிக்க ஒட்டகச்சிவிங்கி, ரெட்டிகுலேட்டட் ஒட்டகச்சிவிங்கி, தெற்கு ஒட்டகச்சிவிங்கி, அங்கோலா ஒட்டகச்சிவிங்கி, தென்னாப்பிரிக்க ஒட்டகச்சிவிங்கி.


ஒட்டகச்சிவிங்கிகள், பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் (international union for conservation of nature – iucn) வெளியிட்டுள்ள சிவப்புப் பட்டியலில் அழிந்து போகக் கூடியவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. பாதுகாக்கப்படவேண்டிய விலங்குகளின் பட்டியலில் ஒட்டகச்சிவிங்கிகள் உள்ளன. ஒட்டகச்சிவிங்கிகளின் எண்ணிக்கை 1985 முதல் **40% வீழ்ச்சி** அடைந்துள்ளதாக பல்வேறு ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன. ஒட்டகச்சிவிங்கிகள் இறைச்சி

## உடல் பாகங்களினால் செய்யப்பட்ட பொருள்கள்



மற்றும் வாலுக்காக மக்களால் வேட்டையாடப்படுகின்றன. ஒட்டகச்சிவிங்கியின் வால், பெல்ட்டுகள் மற்றும் ஆபரணங்கள் செய்யப் பயன்படுகிறது. ஒட்டகச்சிவிங்கியின் உடல் பாகங்களால் செய்யப்பட்ட பொருள்களைப் புறக்கணிப்பதன் மூலம் அதன் அழிவினை நம்மால் தடுக்கவியலும். மேலும் அவை வாழ்விடத்தை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

# ஒட்டகசிவிங்கியின் இனங்கள்





அழகான புள்ளிகளைக் கொண்ட

அதிசய விலங்கு!

ஆஹா! என வியப்பூட்டும்

விந்தை விலங்கு!

இந்த உலகிலேயே நெட்டையான

விலங்கு!

ஈரப்பதம் அதிகமில்லா பகுதிகளில்

வாழும் விலங்கு!

உயரமான ஒட்டகச்சிவிங்கிகள் பற்றி

ஊக்கத்துடன் அறிந்துகொண்டீர்கள்!!

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com